பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 09 | திங்கட்கிழமை | 22.04.2024 | அதிர்வு 265

## புதிய பரிணாமத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

(எஸ்.நிதர்ஷன்)

மே 18 இனப்படுகொலை வாரத்தை இவ்வருடத்தில் இருந்து புதிய பரிணாமத்தில் முன்னெடுக்க 06

### தியத்தலாவையில் நேற்று மாலை சோகம்

# கார் பந்தயத்தில் விபத்து! 7 பேர் பரிதாப உயிரிழப்பு!!

### 23 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்







தியத்தலாவை கார் பந்தயத் திடலில் நேற்று மாலை கோர விபத்தில் 7 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். அத்துடன் 23 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

2024 கார் பந்தயப் போட்டியில் பங்கேற்ற கார் ஒன்று திடலை விட்டு விலகி பார்வையாளர்கள் மீது மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார். 06





## கல்முனை வடக்கில் 28 நாள்களை கடந்தும் தொடர்கின்றது போராட்டம்

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீதான தொடர்ச்சியான 06







இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வழக்கு அடுத்த தவணை நாளை மறுதினம். அதற்கு முன்னர் வழக்கை கட்சி எப்படி ஒரே நிலைப்பாட்டில் அணுகுவது – கையாளுவது – என்று தீர்மானம் எடுப்பதற்காகக் கட்சியின் மத்திய குழு நாளை கூடுமென அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது நாளை நடைபெறுவது சந்தேகம் என்ற நிலைமை இப்போது உருவாகி இருப்பதாகத் தெரிகின்றது.

வழக்கின் கடந்த தவணைக்கும் முன்பாக, கடந்த மார்ச் 17ஆம் திகதி கட்சியின் அரசியல் குழு வவுனியாவில் கூடியது. வழக்கில் எதிராளிகளாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் பெரும்பாலும் எல்லோரும் அந்த அரசியல் குழுவின் 06

### தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரி நௌபர் மௌலவி:

# விசாரணைகளை கேள்விக்கு உள்ளாக்கும் தார்மீக உரிமை எதிர்க்கட்சிக்கு கிடையாது

## இப்படிக் கூறுகின்றார் சரத் வீரசேகர



**“உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரி நௌபர் மௌலவி என்பதை மூன்று சர்வதேச விசாரணைகள் உறுதிப்படுத்தியுள்ளன. குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணைகள் குறித்து கேள்வி எழுப்பும் உரிமை எதிர்க்கட்சிக்கு கிடையாது.”**

**- இவ்வாறு தேசியப் பாதுகாப்புத் தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவின் ஆட்சியிலும் முன் கொண்டு செல்லப்பட்டன.

குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் நிறைவடையவில்லை. ஆகவே இந்த சம்பவம் தொடர்பில் புதிய தகவல்கள் அறிந்தவர்கள் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடளித்து வாக்குமூலம் வழங்கலாம். பயங்கரவாதம் தொடர்பான தகவல்களை மறைப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளின் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்ட விசாரணையில் சிறையில் உள்ள நௌபர் மௌலவி பிரதான சூத்திரதாரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் நியூசிலாந்து பள்ளிவாசலில் இடம்பெற்ற தாக்குதலுக்கு பழி தீர்க்கும் வகையில் கத்தோலிக்க தேவாலயங்களில் பதில் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வதேச மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட மூன்று விசாரணைகளில் இவ்விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு 23 ஆயிரம் குற்றச்சாட்டுக்களுடன் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆகவே இவ்விவகாரத்தில் அரசாங்கத் தரப்பில் எவ்வித தாமதமும் கிடையாது. நீதிமன்ற கட்டமைப்பிலேயே தாமதம் காணப்படுகிறது. ஆகவே விசாரணைகளுக்கு விசேட பொறிமுறை வகுக்கப்பட வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்துகிறேன்.

குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் தமது அரசாங்கத்தில் நீதியை பெற்றுக்கொடுப்பதாக தேசிய மக்கள் சக்தியினர் கத்தோலிக்க சபையிடம் குறிப்பிட்டுள்ளமை வேடிக்கையாகவுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய பட்டியல் உறுப்பினராக பெயரிடப்பட்ட இப்ராஹிம் என்பவரின் இரு புதல்வர்கள் தற்கொலைதாரிகளாக மாறி குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டார்கள்.

அதேபோல் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்ட தினத்தன்று தெமட்டகொட பகுதியில் உள்ள இப்ராஹிமின் வீட்டுக்கு பொலிஸார் உட்பட பாதுகாப்பு தரப்பினர் சென்ற போது அவரது மருமகள் குண்டை வெடிக்க செய்து தனது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

ஆகவே இவர்கள் உண்மையான சூத்திரதாரியை நன்கு அறிந்திருந்தார்கள். ஆகவே மக்கள் விடுதலை முன்னணியினர் இப்ராஹிமிடம் இவ்விடயம் தொடர்பில் வினவ வேண்டும்.

இதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் தொடர்பில் எதிர்க்கட்சியினர் பல கேள்விகளை முன்வைத்துள்ளார்கள்.

குறுகிய அரசியல் நோக்கத்துக்காக நல்லாட்சி அரசாங்கம் தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்தியது. பயங்கரவாதி சஹ்ரானின் அடிப்படைவாத செயற்பாடுகள் தொடர்பில் நன்கு அறிந்திருந்தும் அதற்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளையும் அப்போதைய அரசாங்கம் எடுக்கவில்லை.

முஸ்லிம் வாக்குகளுக்காக இஸ்லாமிய அடிப்படைவாத செயற்பாடுகளை அலட்சியப்படுத்தியது. இதன் விளைவாகவே குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் உண்மையான முஸ்லிம்களும் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தார்கள்.

குணடுத்தாக்குதல் தொடர்பில் கேள்வி கேட்கும் உரிமை தற்போதைய எதிர்க்கட்சிக்கு கிடையாது. புதன்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ள உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தால் எவ்வித மாற்றமும் ஏற்பட போவதில்லை.”– என்றார்.

# மல்வத்து, அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர்களிடம் ஆசி பெற்ற ஜனாதிபதி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி மல்வத்து விகாரைக்குச் சென்று மல்வத்து பீடத்தின் மகாநாயக்க தேரர் வண. திப்படுவாவே ஸ்ரீசுமங்கல தேரரைச் சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டார்.

அத்தோடு அஸ்கிரிய பீடத்தின் மகா நாயக்க தேரர் வரகாகொட ஸ்ரீஞானேஸ்வர தேரரையும் ஜனாதிபதி சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டார்.

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான அறிக்கை:

# பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த கோட்டாபய ராஜபக்ஷவே மறுத்தார்

## மல்கம் ரஞ்சித் ஆண்டகை கருத்து



உயிர்த்தஞாயிறு தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தயங்குவது குறித்து கர்தினால் மல்கம் ரஞ்சித் ஏமாற்றம் வெளியிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இடம்பெற்று ஐந்து வருடங்களாவதை குறிக்கும் நிகழ்வில் உரையாற்றியவேளை அவர் ,மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தனக்கு நெருக்கமான அமைப்புகளை சேர்ந்த நபர்களை கைதுசெய்ய வேண்டியிருக்கும் என்பதால் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த முடியாது என கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி வகித்தவேளை தன்னிடம் தெரிவித்தார் என கர்தினால் மல்கம் ரஞ்சித் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுதாக்குதல் குறித்து புதிய விசாரணைகளை ஆரம்பிக்கும் ஆர்வத்தை தற்போதைய அரசாங்கம் வெளிப்படுத்தவில்லை எனவும் கர்தினால் விமர்சனத்துள்ளார்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பின்னணி: வெளிப்படையான விசாரணை வேண்டும்

## இலங்கையிடம் ஐ.நா. வலியுறுத்து

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்களை வெளிக்கொணர முழுமையான மற்றும் வெளிப்படையான விசாரணை வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் – ஆண்ட்ரே பிராஞ்ச் தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையின் மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் மூன்று ஹோட்டல்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பொது மக்களை இலக்கு வைத்து குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் 45 வெளிநாட்டவர்கள் உள்ளிட்ட 290 பேர் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் நடத்து ஐந்து வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இன்று வரை நீதி கோரி காத்திருக்கின்றனர்.

இந்தநிலையிலே, போர்க்குற்றம், மனித உரிமை மீறல்கள், ஊழல் அல்லது அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றுக்கான பொறுப்புக்கூறல் பற்றாக்குறையால் இலங்கை தொடர்ந்தும் பாதிக்கப்படுவதாக மார்க் – ஆண்ட்ரே பிராஞ்ச் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாடு முன்னேற வேண்டுமானால் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், தாக்குதலைத் தடுக்கத் தவறியமைக்கு அப்



போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் உயர்மட்ட அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டும் என்றும் மார்க் – ஆண்ட்ரே பிராஞ்ச் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான முந்தைய விசாரணைகளின் முழுமையான விபரங்களை வெளிப்படுத்தவும், சுயாதீன விசாரணையை முன்னெடுக்கவும் ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு அழைப்பு விடுத்துள்ளது.

# நாட்டைக் கட்டியெழுப்புகையில் எவரையும் கடந்து செல்லவோ விட்டுவிடவோ தயாரில்லை

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

**"நாட்டின் பொருளாதாரத்தையும் மக்களையும் வலுப்படுத்தும் வேலைத் திட்டத்தில் அரசாங்கம் யாரையும் கடந்து செல்லவோ விட்டுவிடவோ போவதில்லை. "**

**- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

வெலிமடை அம்பகஸ்தோவ பொது விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான அரிசி நிவாரணம் வழங்கும் 2024 தேசிய வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ், முழு நாட்டையும் உள்ளடக்கிய குறைந்த வருமானம் பெறும் 2.74 மில்லியன் குடும்பங்களுக்கு இரண்டு மாதங்களுக்கு மாதாந்தம் பத்து கிலோ அரிசி வழங்கப்படும்.

பதுளை மாவட்டத்தின் பதினைந்து பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள 191,548 பயனாளி குடும்பங்கள் அரிசி மானியம் பெறத் தகுதி பெற்றுள்ளன. ஆயிரம் குடும்பங்களுக்கு அரிசி வழங்கும் நிகழ்வின் அடையாளமாக இன்று 25 பயனாளிகளுக்கு ஜனாதிபதியின் கைகளால் அரிசிப் பொதிகள் வழங்கப்பட்டன.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் பிரதேச செயலாளர்களின் மேற்பார்வையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு அரிசி விநியோகிக்கப்படுகிறது.

மேற்படி நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கருத்து தெரிவிக்கையில் –

"இன்று இந்நாட்டு மக்கள் தமிழ், சிங்கள புத்தாண்டை மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகின்றனர். கடந்த இரண்டு வருடங்களில் புத்தாண்டை கொண்டாடுவது பற்றி நினைத்துக்கூட பார்க்க முடியாத சூழ்நிலையில் நாடு இருந்தது. கடந்த காலங்களில் தேவையான எரிபொருள், எரிவாயு, உரம் போன்றவற்றை வழங்க முடியாமல் மிகவும் கடினமான சூழலுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது.

நான் 2022 தமிழ், சிங்கள புத்தாண்டை கம்புருகமுவ பிரதேசத்தில் கழித்தேன். அங்குள்ள எரிபொருள் நிலையங்களுக்கு முன்பாக மக்கள் இரவு வரை காத்திருப்பதைக் கண்டேன். ஆட்சியாளர்களை மக்கள் கடுமையாக குற்றம் சாட்டினர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து இன்று நாடு அடைந்திருக்கும் முன்னேற்றத்தை சிலருக்கு நினைத்துக்கூட பார்ப்பது கடினமாக உள்ளது.

நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்காக பல கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. அந்த முடிவுகள் மக்கள் விரும்பாத முடிவுகள் என்றே சொல்ல வேண்டும்.

முன்னர் இந்த நாட்டின் அரசாங்கங்கள் ஒரு கட்சிக்கு உரிதானதாகவே இருந்தன. இது தவிர இரண்டு அல்லது மூன்று கட்சிகள் சேர்ந்து ஆட்சி அமைக்கும். ஆனால் இந்த அரசு அப்படியானதல்ல. ஐக்கிய தேசியக் கட்சியில் நான் மட்டுமே இருந்தேன். ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி என அனைவரும் அரசாங்கத்துடன் இணைந்தனர். அந்த அரசாங்கம் நாட்டின் தேவைக்காகவே உருவாக்கப்பட்டது. இந்த அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது என சிலர் கூறினர்.

எப்படியிருந்தாலும், நாட்டு நலனுக்கான நோக்கங்களை வெற்றிகரமாக செயல்படுத்தினோம். அதற்காக பிரதமர் மற்றும் அமைச்சரவைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த இக்கட்டான நேரத்தில் மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்குவதற்கு ஆளுநர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிற அதிகாரிகள் பெரும் சேவை செய்துள்ளனர். நாம் அனைவரும் இணைந்து செயல்பட்டதால்தான் இன்று இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.



இன்று, சுற்றுலா வணிகம் எதிர்பாராத வகையில் வளர்ச்சியடைந்து வருகிறது. அதன் மூலம் மக்களின் வருமானமும் அதிகரித்துள்ளது. மேலும், கிராமப்புற பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான விரிவான திட்டத்தை செயல்படுத்தியுள்ளோம். அந்த பணம் இன்று அரச மற்றும் தனியார் துறைகளில் சம்பள உயர்வு மூலம் நாட்டின் பொருளாதாரத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடின்றி நாம் அனைவரும் கடினமான காலங்களில் கஷ்டப்பட்டோம். இன்று நாடு அபிவிருத்தியடைந்து வருகின்ற போதிலும் ஒரு பிரிவினர் இன்னமும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி , தொழிற்துறை வீழ்ச்சி, வேலை இழப்பு போன்ற காரணங்களால் இன்னும் பலர் சிரமத்தில் உள்ளனர்.

நாட்டின் வளர்ச்சியின் பயனை அனைவரும் பெற வேண்டும். எனவே, அஸ்வெசும திட்டத்தின் மூலம் வழங்கப்படும் பலனை மூன்று மடங்காக உயர்த்த நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். அத்துடன் தமிழ், சிங்கள, புத்தாண்டு காலத்தை முன்னிட்டு குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு தலா 10 கிலோ அரிசியை இம்மாதம் மற்றும் அடுத்த மாதம் வழங்க ஏற்பாடு செய்துள்ளோம்.

இந்த அரிசியை பாரிய அரிசி ஆலை உரிமையாளர்களிடமிருந்து வாங்கவில்லை. சிறு அரிசி ஆலை உரிமையாளர்களிடம் இருந்து. இவற்றை வாங்கும் போது சந்தை விலையை விட அதிக விலை கொடுத்து வாங்குகிறோம். அப்போது அந்த சிறு அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்கும்.

நாட்டின் பொருளாதாரத்தையும் மக்களையும் கட்டியெழுப்புவதில் யாரையும் கடந்து செல்வதற்கோ அல்லது விட்டு விடவோ நாம் தயாரில்லை. எனவே, நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகிறது. இன்று, சுற்றுலாத்துறை மூலம் கிராமங்களுக்கு பணம் கிடைக்கிறது. மேலும், விவசாயத்தை நவீனமயமாக்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது. வலுவான ஏற்றுமதி விவசாயத்தை உருவாக்குவதே இதன் நோக்கம் என்று சொல்ல வேண்டும்.

மேலும், பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தியுள்ளோம். அந்த மக்களுக்கு காணி வழங்குவதற்கான தீர்மானம் தற்போது எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் 20 லட்சம் பேருக்கு இலவச காணி உரிமை வழங்கும் வேலைத்திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கொழும்பில் உள்ள 50,000 குடியிருப்புகளின் உரிமையை அந்த மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. "- என்றார்.





# ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பின்னணியில் ராஜபக்ஷக்கள்

## குற்றவாளிகள் தப்ப முடியாது என்று சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

(பழுவூரான்)

"இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டபோது சர்வதேச விசாரணைக்கு தயார் எனக் கூறிய ரணில் விக்கிரமசிங்க, இன்று முந்நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதற்கு ஒரு சர்வதேச விசாரணையைச் செய்வதற்குத் தயங்குகின்றார் எனில் ஈஸ்டர் குண்டு வெடிப்பின் பின்புலத்தில் ராஜபக்ஷ குடும்பத்தினர் இருந்திருக்கலாம் என்ற சந்தேகத்தை இன்னும் உறுதிப்படுத்துகின்றது."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதலில் உயிர்நீத்தவர்களை நினைவுகூரும் நிகழ்வு நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றது. இதன்போது உரையாற்றும்போதே சாணக்கியன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கொடூரமான ஈஸ்டர் குண்டுவெடிப்புக் கொலை நடந்து ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகியிருக்கின்றன. இந்தக் குண்டுத் தாக்குதல் இயல்பாக நடந்ததா? இதற்குப் பின்னால் ஒரு பின்புலம் இருந்ததா? அரசியல் இலாபம் அடைவதற்காகச் செய்யப்பட்டதா? எனப் பல சந்தேகங்கள் அந்த நேரத்தில் எழுந்தன.

ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில் அந்தச் சந்தேகங்கள் கொஞ்சம் கொஞ்சமாக வலுவடைந்து சந்தேகத்துக்கிடமில்லாமல் இதுவொரு அரசியல் பின்புலத்துடன் சம்பந்தப்பட்டது என்பது போல் தென்படுகின்றது.

இந்தக் கொலைக்குப் பின்னாலிருந்த எவரும் இதுவரை தண்டிக்கப்படவில்லை. ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில் இது விசாரணைக்குரிய காலமல்ல. தீர்ப்பு வழங்க வேண்டிய காலமாகும்.

பாப்பரசர் உட்பட மதத்தலைவர்கள் பலராலும் எத்தனையோ அழுத்தங்கள் கொடுத்தும் இலங்கை அரசு மக்கள் நம்பக்கூடிய வகையில் இதுவரை எந்தவொரு நீதியும் வழங்கவில்லை என்பதே சந்தேகத்துக்குரிய விடயமாகும்.




ஈஸ்டர் குண்டு வெடிப்புக்குப் பின்புலத்தில் இருந்தவர்கள் யாரென்பது கடந்த வருடம் சனல் – 4 இல் வெளிவந்த ஆவணப்படம் மூலமாக பல சந்தேகங்கள் இன்றும் எழுப்பப்பட்டிருக்கின்றன.

இன்று நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ச குடும்பத்தின் ஆதரவுடன்தான் அரசை நடத்திக்கொண்டிருக்கின்றார். கடந்த வருடம் ஒரு சர்வதேச ஊடகவியலாளர் ஏன் இதற்கு ஒரு விசாரணை ஆரம்பிக்கப்படவில்லை, சர்வதேச விசாரணை ஒன்றின் மூலம் உண்மை கண்டறியப்படலாம் என்று கூறியபோது உள்நாட்டு விசாரணை போதும் எனக் கூறியிருந்தார்.

இதே ஜனாதிபதி பிரதமராக இருந்தபோது 2017இல் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலே 2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டுமென்றால் சர்வதேச விசாரணைக்குத் தான் தயாரெனக் கூறியிருந்தார். இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டபோது சர்வதேச விசாரணைக்குத் தயார் எனக் கூறியவர் இன்று முந்நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதற்கு ஒரு சர்வதேச விசாரணையைச் செய்வதற்குத் தயங்குகின்றார் எனில் ஈஸ்டர் குண்டு வெடிப்புக்குப் பின்புலத்தில் ராஜபக்ஷ குடும்பத்தினர் இருந்திருக்கலாம் என்ற சந்தேகத்தை இன்னும் உறுதிப்படுத்துகின்றது.

ஈஸ்டர் குண்டு வெடிப்பு கொழும்பு, நீர்கொழும்புடன் சேர்ந்து ஏன் மட்டக்களப்பில் மட்டும் நடத்தப்பட்டது? வடக்கு, கிழக்கிலே எட்டு மாவட்டங்கள் இருக்கின்றபோது ஏன் மட்டக்களப்பில் மட்டும் நடத்தப்பட்டது என்பது பற்றி எமது மக்கள் மிக அவதானமாகச் சிந்திக்க வேண்டும். தமிழ் மக்கள் அதிகமான வாழ்கின்ற, தமிழ் வாக்காளர்கள் அதிகம் இருக்கின்ற மட்டக்களப்பிலே ஏன் இந்தக் குண்டு வெடிப்பு நடந்தது எனில் ஈஸ்டர் குண்டு வெடிப்புக் காணொளியிலே மட்டக்களப்பு மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டிருக்கின்ற சிவநேசதுரை சந்திரகாந்தனுடைய முன்னாள் ஊடகப் பேச்சாளர் அஸாத் மௌலானாவின் வாக்குமூலத்திலே சொல்லப்படுகின்ற விடயங்களைப் பார்த்தால் எம்முடைய மக்களுக்கு உண்மை புரியும்.

அதாவது ராஜபக்ஷ குடும்பத்தினர் இந்த ஈஸ்டர் குண்டு வெடிப்பு நடந்ததினூடாக நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ளது, நாட்டில் பலமானதொரு தலைவர் இருந்தால்தான் இங்குள்ள சிங்கள மக்களுக்குப் பாதுகாப்பு என்பது போல் ஒரு மாயை உருவாக்கினார்கள்.

ஈஸ்டர் குண்டு வெடிப்பு நடந்த காலப்பகுதியிலே மட்டக்களப்பு மாவட்டத்தில் சிவநேசதுரை சந்திரகாந்தன் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருந்தால் இஸ்லாமிய மக்களுக்கு எதிராகப் பல வன்முறைகள் தூண்டப்பட்டிருக்கும். அன்று தமிழரசுக் கட்சியினரான நாங்கள் மட்டக்களப்புக்குத் தலைமைத்துவம் வழங்கிய காரணத்தினால்தான் துரதிஷ்டவசமான சம்பவங்கள், கலவரங்கள் எதுவும் நடைபெறாமல் பொறுப்புள்ள தலைவர்களாக மக்களை வழிநடத்தியிருந்தோம்.

கிறிஸ்மஸ் ஆராதனையின்போது தேவாலயத்தினுள்ளே ஒரு நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம் ஐயாவை சுட்டுக்கொலை செய்த குற்றச்சாட்டிலே சிறையிலிருந்த பிள்ளையான் அந்த நேரத்தில் இருந்திருந்தால் எவ்வாறான வன்முறைகள் நடந்திருக்கும் என்பதை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தண்டனையிலிருந்து பிள்ளையான் உள்ளிட்ட குற்றவாளிகள் தப்ப முடியாது." – என்றார்.

(மேலதிக படங்கள் 6ஆம் பக்கத்தில்...)

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பின்னணியில் ராஜபக்ஷக்கள்

## குற்றவாளிகள் தப்ப முடியாது என்று சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டத்தில் பங்குபற்றியிருந்தனர்.

அங்கு எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமையவே வழக்கு நடவடிக்கைகளைத் தாம் முன்னெடுக்கின்றார் என்று நீதிமன்றத்திலும் பதிவு செய்தார் வழக்கின் எதிராளிகளில் ஒருவரான ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன். ஏனைய எதிராளிகள் எவரும் நீதிமன்றத்தில் அதற்கு எதிர்க் கருத்துப் பதிவிடவில்லை. ஆனால் வெளியில் வந்து – நீதிமன்றத்துக்கு வெளியில் – முரணாக எல்லாம் கருத்து வெளியிட்டிருந்தனர்.

அவை பற்றி எல்லாம் அடுத்த வழக்குத் தவணைக்கு முன்னர் பேசி, ஒற்றை முடிவை எடுத்து, அதன் அடிப்படையில் வழக்கைக் கட்சியின் எதிராளிகள் எல்லோரும் ஒன்றுபட்டு எதிர்கொள்ள வேண்டும் என்ற இலக்கில், வழக்குத் தவணைக்கு முன்னர், மத்திய குழுவைக் கூட்ட முயற்சி எடுக்கப்பட்டதாகத் தெரிகின்றது. அந்தக் கூட்டம்தான் நாளை மறுதினம் வழக்குத் தவணைக்கு முன்னர் நடக்குமா என்ற கேள்வி – சந்தேகம் – இப்போது பிறந்துள்ளது.

இந்தக் கூட்டத்தை முதலில் கடந்த இருபதாம் திகதி – நேற்று முன்தினம் – கூட்டுவதற்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டன. எனினும், பின்னர் ஏதோ காரணத்திற்காக அது 19ஆம் திகதிக்கு முன்போடப்பட்டது. ஆனால், அது அன்னை பூபதி நினைவு தினம் என்று சுட்டிக் காட்டப்பட்டமையால் நாளை 22 ஆம் திகதிக்கு – போயா விடுமுறை தினத்திற்கு – அது மாற்றப்பட்டது. அன்றைய தினம் கூட்டம் வவுனியாவில் நடக்கும் என அறிவிக்கவும்பட்டது.

அன்றைய தினம் சித்ரா பௌர்ணமி நாள் என்பதால் தாங்கள் கூட்டத்தில் பங்குபற்ற முடியாது என சி.வி.கே.சிவஞானமும், சாந்தி சிறீஸ்கந்தராஜாவும் முதலில் தெரிவித்திருந்தனர்.

ஆனால், இப்போது திடீரென சிறிதரன், சிறிநேசன், யோகேஸ்வரன், அரியநேத்திரன் என்று ஒரே குரூப் நாளை மறுதினம் கூட்டத்தில் தாங்களும் பங்குபற்ற முடியாது என்று தெரிவித்திருப்பதாக அறிய வருகின்றது.

இப்படி ஒரேயடியாகப் பின்வாங்கும் திட்டத்தில் உள்நோக்கம் ஏதும் உண்டா என்பது தெரியவில்லை.

எது, எப்படி என்றாலும் நாளை மறுதினம் வழக்குத் தவணைக்கு முன்னர் ஒன்றுபட்டுத் தீர்மானம் எடுக்கும் கட்சியின் முயற்சி சரிவராமல் பிசுபிசுத்துப் போக கூடும் என்றே தோன்றுகின்றது.

அதுதான் நிலைமை என்றால், மார்ச் 17ஆம் திகதி வவுனியாவில் கூடிய கட்சியின் அரசியல் குழு தனக்கு வழங்கிய ஆணைப்படி சுமந்திரன் தமது தரப்பு வழக்கை முன்னெடுத்துச் செல்வார், அதுதான் அவருக்கு உள்ள ஒரே வழி என்று நினைக்கிறேன்.

நாளை நடத்த உத்தேசிக்கப்பட்ட கட்சியின் மத்திய குழு கூட்டத்தில், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரமும் ஆராயப்பட இருந்தது.

அது தொடர்பில் கட்சிக்குள் கள நிலைமை சரியில்லாததால், அது குறித்த முடிவு ஒன்று எட்டப்படுவதை தவிர்ப்பதற்குத்தான் இத்தகைய கூட்டு 'அப்செண்ட்' திட்டமோ தெரியவில்லை.

மலிந்தால் சந்திக்கு – சந்தைக்கு – வரும் அப்போது பார்த்துக் கொள்ளலாம்.

\+ + +

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலகத்துக்குட்பட்ட புளியங்குளம் சமுர்த்தி அபிவிருத்தி வங்கியின் பயனாளிகள் தரப்புக்கள் பங்குபற்றும் விளையாட்டுப் போட்டி நேற்று நடைபெறவிருந்தது. பெரும் செலவில் ஆயத்தங்கள் நடந்த நிலையில், கடைசி நேரத்தில் அது ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

என்ன, ஏது என்று விசாரித்தால், அந்த நிகழ்ச்சிக்குப் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட தமிழரசின் எம்.பியான சார்ள்ஸ் நிர்மலநாதன், கௌரவ விருந்தினராக தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

அதைப் பொறுக்க முடியாத வன்னி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் ஈ.பி.டி.பியின் எம்.பியுமான திலீபன் வவுனியா அரச அதிபர் மீது நடத்திய பாய்ச்சல்தான் காரணம் என்று தெரிகின்றது.

வன்னி உருப்பட இவர்கள் விடமாட்டார்கள் போலும்...!

## கல்முனை வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிர்வாக அடக்குமுறைகளுக்கு எதிராக அங்குள்ள மக்கள் 28 ஆவது நாளாகவும் நேற்று தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுத்தனர்.

"கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தில் மாத்திரம் பாரபட்சமான நிலைப்பாடு காணப்படுகின்றது. இது அடிப்படை மனித உரிமை மீறலாகும். இதற்கு நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும். இதனை உள்நாட்டலுவல்கள் அமைச்சும், அம்பாறை மாவட்ட அரச அதிபரும் கருத்தில்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்." – என்று தொடர் போராட்டத்தை முன்னெடுக்கும் மக்கள் தெரிவித்தனர்.

## புதிய பரிமாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேண்டும் என்று யாழ்ப்பாணத்தில் நேற்று சிவில் அமைப்புக்கள் ஒன்றுகூடித் தீர்மானித்துள்ளன.

\+ முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் 15 ஆவது ஆண்டை பரவலாக மக்கள் மயப்படுத்த வேண்டும்.

\+ மக்கள் தமக்கு எவ்வாறான வாழ்க்கை தேவை, அதற்கு எவ்வாறான சமூக பொருளாதார அரசியல் ஏற்பாடுகள் தேவை என்பதைத் தாமே சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

\+ முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்தவையும் இன்று காசாவில் நிகழ்ந்து கொண்டிருப்பவையும் இனிமேலும் எந்த மக்களுக்கும் நிகழக் கூடாது.

– இவ்வாறு யாழ்ப்பாணம் புனித தெரேசா தேவாலய முன்றலில் நேற்று நடைபெற்ற சிவில் சமூக அமைப்புக்களின் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## கார் பந்தயத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விபத்தில் 8 வயது சிறுமி ஒருவர், போட்டி ஒழுங்கமைப்பாளர்கள் 4 பேர் உட்பட 7 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

காயமடைந்த 23 பேரும் ஹப்புத்தளை மற்றும் தியத்தலாவை வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்களில் மூவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு கோரி நாடளாவிய ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுப்பு!





பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா அடிப்படை நாள் சம்பளத்தை வழங்குமாறு கோரி தொழிலாளர்கள் உள்பட பல்வேறு தரப்பினர் நேற்றும் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தனர்.

இதற்கமைய, கொட்டகலை நகரில் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொட்டகலை பிரதேச சபையின் முன்னாள் தலைவரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அமைப்பாளருமான ராஜமணீ பிரசாத் ஏற்பாட்டில் நூற்றுக்கணக்கான மக்களின் பங்கேற்புடன் இந்த போராட்டம் இடம்பெற்றது.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1700 ரூபாயினை நாள் சம்பளமாக வழங்குமாறு வலியுறுத்தி கொட்டகலை நகர வர்த்தகர்கள் கடைகள் அனைத்தையும் மூடி கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டிருந்தனர்.

இதேவேளை, அக்கரப்பத்தனை நகரிலும் நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் ஏ.பி.சக்திவேல் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அக்கரப்பத்தனை நகர வர்த்தகர்களும் தமது கடைகள் அனைத்தையும் பூட்டி, கறுப்புக் கொடிகளைப் பறக்க விட்டனர்.

நானுஓயா நகரில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் சக்திவேல் தலைமையில் நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது.

அத்துடன், நானுஓயா நகர வர்த்தகர்கள் தங்களின் வர்த்தக நிலையங்களை இரு மணி நேரம் அடைத்து, இந்த போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தனர்.

மேலும் பெருமளவான தொழிலாளர்களும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவாளர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தலையில் கறுப்புப் பட்டி அணிந்தும் நகரெங்கும் கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டும் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தனர்.

அத்துடன் ‘தொழிலாளர்களின் கோரிக்கைகளை புறக்கணிக்காதீர்’, ‘சம்பள விடயத்தில் இழுத்தடிப்பு வேண்டாம்’, ‘தொழிலாளர்களை ஏமாற்றாதீர்கள்’ போன்ற அரசுக்கு எதிரான வசனங்கள் குறிப்பிடப்பட்ட பதாதைகளை ஏந்தியும் கோஷங்களை எழுப்பியவாறும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நானுஓயா பொலிஸார் இப்போராட்டத்துக்கான பாதுகாப்பினை வழங்கினர்.

பெருந்தோட்டக் கம்பனிகளின் அராஜக போக்கை கண்டித்தும் மலையக நகரங்களில் நேற்று போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போராட்டத்துக்கு சிவில் அமைப்புகள் மற்றும் நகர வர்த்தகர்கள் தரப்பில் இருந்தும் பேராதரவு வழங்கப்பட்டது.

நகர் பகுதிகளில் கறுப்பு கொடிகள் பறக்கவிடப்பட்டதுடன், நுவரெலியா மாவட்டத்தில் ஹட்டன், கொட்டகலை, டிக்கோயா, பொகவந்தலாவை, மஸ்கெலியா, டயகம, அக்கரப்பத்தனை, நானுஓயா, இராகலை உள்ளிட்ட நகரங்களில் இ.தொ.காவின் ஏற்பாட்டில் சம்பள உயர்வுக்கான அழுத்தம் கொடுக்கும் போராட்டங்கள் இடம்பெற்றன.

பதுளை மாவட்டத்தில் பதுளை, பசறை, ஹாலிஎல, ஹப்புத்தளை உள்ளிட்ட நகரங்களில் எதிர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்றன.

கண்டி மாவட்டத்தில் நாவலப்பிட்டி, புசல்லாவ, மடுல்கலை, உளுகங்கை, ரங்கல உள்ளிட்ட பகுதிகளிலும், இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங்கொடை பின்னவல, கஹாவத்தை, இறக்குவானை உள்ளிட்ட நகரங்களிலும், மாத்தளை நகரில் மற்றும் களுத்துறை மத்துகம பகுதியிலும், அவிசாவளை உள்ளிட்ட நகரங்களிலும் போராட்டங்கள் இடம்பெற்றன.

இ.தொ.காவின் அரசியல் செயற்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள், தொழிலாளர்கள், செயற்பாட்டாளர்கள் பலர் இந்தப் போராட்டங்களில் பங்கேற்றிருந்தனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சரித்திரம் திரும்புகிறது

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்த வரை சரித்திரம் திரும்புகிறது என்றுதான் தோன்றுகின்றது.

கட்சியின் தலைவர் நெருக்கடிக்கு உள்ளாகும் போது கட்சி பிளவுபட்டு, இரண்டு அணிகளாகுவது சுதந்திரக் கட்சிக்குப் புதியதல்ல.

அதுதான் 1982 இலும் நடந்தது. இப்போது 42 ஆண்டுகள் கழிந்து மீண்டும் நடக்கின்றது.

அப்போது கட்சித் தலைவராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா பின்னடைவைச் சந்தித்தபோது, கட்சிக்குப் புத்துயிரூட்ட அவர் புதிய ஒரு தரப்பைக் கட்சிக்குள் கொண்டு வந்த சமயம் கட்சி இரண்டு அணியானது. இப்போதும் கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன பின்னடைவைச் சந்தித்து விஜயதாஸ ராஜபக்ஷவைக் கொண்டு வந்து, கட்சிக்குள் முன்னிலைப்படுத்த முயன்ற போது கட்சி இரண்டு அணியாகின்றது.

இதில் வேடிக்கை என்னவென்றால், இந்த இரண்டு பிளவுகளிலுமே கட்சியின் ஸ்தாபகர் - பிதாமகர் - பண்டாரநாயக்காவின் உறவுகளே நேரடியாக சம்பந்தப்பட்டிருப்பதுதான்.

1982 இழுபறியின்போது ஸ்தாபகர் பண்டாரநாயக்காவின் மனைவி சிறிமாவோவும், மகன் அனுரா, மகள் சந்திரிகா, மருமகன் விஜய குமாரதுங்க ஆகியோர் சம்பந்தப்பட்டனர்.

இப்போது குழப்பத்தின் பின்புலத்தில் பண்டாரநாயக்கா பரம்பரையில் அரசியலில் எஞ்சியிருக்கும் வாரிசான சந்திரிகா சம்பந்தப்படுகிறார்.

1982 இல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன அந்த வருடத்தைத் தேர்தல் ஆண்டாக அறிவித்திருந்தார். அப்போதுதான் சு.கவுக்குள் பிளவு வெடித்தது. அதேபோல இப்போது அவரின் அரசியல் வாரிசும், மருமகனும், அரசியல் சிஷ்யப் பிள்ளையுமான ரணில் விக்கிரமசிங்க அதே நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக இருந்து கொண்டு, இந்த 2024 ஆம் ஆண்டைத்தேர்தல்வருடமாகஅறிவித்தபோதுதான் - இப்போதுதான் - சு.கவுக்குள் பிளவு வெடித்து, அக்கட்சி இரண்டு அணிகளாகும் விபரீதம் உருவாகி இருக்கிறது.

1970 முதல் 1977 வரை சிறிமாவோ தலைமையிலான சுதந்திரக் கட்சியின் அரசு கோலோச்சியது. 1977 தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றியது. சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை ஆக எட்டாகக் குறைந்தது. எனினும் சிறிமாவோ, மகன் அநுரா என இரண்டு பண்டாரநாயக்காக்களும் நாடாளுமன்றம் வந்தனர்.

ஆயினும், ஜனாதிபதி ஆணை குழு விசாரணைகளை நடத்தி, அதன் மூலம் சிறிமாவோவைக் குற்றவாளியாகக் கண்டு, 1980 அக்டோபரில் அவரின் குடியுரிமையை ஏழு ஆண்டுகளுக்குப் பறித்து, எம்.பி. பதவியையும் பிடுங்கி, வீட்டுக்கு அனுப்பியது ஜே.ஆரின் அரசு.

அதனால், கட்சிக்குள் நலிவுற்ற சிறிமாவோ கட்சியை பலப்படுத்துவதற்காக - இப்போது மைத்திரிபால சிறிசேன, விஜயதாஸ ராஜபக்ஷவை சு.கவுக்குள் கூட்டி வந்தமை போல - மகள் சந்திரிகாவையும், நடிகர் என்ற முறையில் சிங்கள மக்கள் மத்தியில் கதாநாயகனாகப் போற்றப்பட்ட மருமகன் விஜய குமாரதுங்கவையும் கட்சிக்குள் முன்னிலைக்குக் கொண்டு வர முயன்றார். அதை வைத்து சிறிமாவோவுக்கு எதிராக மற்றொரு அணி, தாங்கள்தான் உண்மையான சு.க. என்று போட்டிக்குக் களம் இறங்கியது. அதுவரை காலமும் சிறிமாவோவுக்கு அடுத்த மட்டத் தலைவராக - அவரது வலது கையாக - செயல்பட்ட மைத்திரி பால சேனநாயக்க அந்த மாற்று அணிக்குத் தலைமை தாங்கினார். அவருக்கு அடுத்து, அந்த அணியின் பிரதித் தலைவர் போன்ற பதவிக்கு சிறிமாவோவின் மகன் அநுரா பண்டாரநாயக்கா எம்.பி. செயற்பட்டார். அக்கா சந்திரிகா, மைத்துனர் விஜயகுமாரதுங்க போன்றோரின் வரவால் கட்சிக்குள் தமது முன்னிலைப் பாத்திரம் பின்தள்ளப்பட்டுவிடும் என்ற பயம் காரணமாக அநுரா அப்படித் தாய்க்கு எதிராகச் செயல்பட்டு இருக்கக் கூடும்.

அந்தப் பிரச்சினை வெடித்த போதும், இப்படித்தான் சு.கவின் தலைமையகம் பொலிஸாரால் சீல் வைத்துப் பூட்டப்பட்டது. கட்சியின் தலைமை யாருக்குரியது என்ற போராட்டம் உயர்நீதிமன்றம் வரை அப்போது இழுபட்டது.

அதுதான் இப்போதும் நடக்கின்றது.

அன்றைய நிலைமை போல நாடாளுமன்றத்தில் சு.கவின் பலம் ஒற்றை எண்ணுக்கு வந்து விட்டது. கட்சித் தலைவர் அந்தப் பதவியில் செயற்பட முடியாத நலிவு நிலைக்கு வந்து விட்டார்.

அதனால் 1982 இல் நடந்தமை போல இப்போதும் கட்சி பிளவுண்டு விவகாரம் நீதிமன்றத்திற்கு முன்னால் அல்லாடுகின்றது.

நலிவுற்ற சு.க. 1982 ஜனாதிபதி தேர்தலில் காத்திரமான வேட்பாளர் இல்லாததால், ஹெக்டர் கொப்பேகடுவவை நிறுத்தி ஜே.ஆரிடம் தோல்வியைச் சந்தித்தது. அந்த வரிசையில் கொப்பேகடுவவின் இடத்துக்கு வருகின்றாரோ விஜயதாஸ ராஜபக்ஷ? காலம்தான் பதில் கூறும்.

# நரேந்திர மோடியின் ஆட்சியில் ரயிலில் பயணிப்பதே தண்டனை

## ராகுல் காந்தி தெரிவிப்பு




“பிரதமர் மோடியின் ஆட்சியில் ரயிலில் பயணம் செய்வதே தண்டனையாகிவிட்டது” என காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள காணொலியில்,

“மோடியின் ஆட்சியில் ரயிலில் பயணம் செய்வது தண்டனையாகிவிட்டது. ரயிலில் பொதுப்பெட்டிகளை குறைத்து, எலைட் ரயில்களை மட்டுமே ஊக்குவிக்கும் மோடி ஆட்சியில் அனைத்து தரப்பு பயணிகளும் துன்புறுத்தப்படுகிறார்கள். பணம் கொடுத்து டிக்கெட் பெற்றாலும் அவர்களால் இருக்கையில் அமர்ந்து செல்ல முடிவதில்லை.

சாமானிய மக்கள் தரையிலும், கழிவறையிலும் அமர்ந்து பயணம் செய்கின்றனர். ரயில்வே துறையை பலவீனப்படுத்தி அதை திறனற்றது என நிரூபித்து தனது நண்பர்களுக்கு விற்கப்பார்க்கிறது இந்த பா.ஜ.க. அரசு. சாமானியர்களின் பயணத்தைக் காப்பாற்ற ரயில்வே துறையை அழிக்கும் மோடி அரசை அகற்ற வேண்டும்.” எனப் பதிவிட்டுள்ளார்.

# ஏழைகள் வாழ்வில் பெரிய மாற்றத்தை பிரதமர் மோடி கொண்டு வந்துள்ளார்

“சாதி வெறியை அழித்து, ஒவ்வொரு குடிமகனின் மேம்பாட்டிற்காக பிரதமர் மோடி பாடுபட்டுள்ளார் என்றும், ஏழைகளின் வாழ்வில் மிகப்பெரிய மாற்றத்தை அவர் கொண்டு வந்துள்ளார்.”

– இவ்வாறு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

பிஹாரில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய ஷா,

“பிரதமர் மோடி சாதி வெறியை அழித்து, ஒவ்வொரு குடிமகனின் மேம்பாட்டிற்காக பாடுபட்டுள்ளார். ஏழை மக்களின் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தை கொண்டு வந்துள்ளார்.

இன்று லாலு பிரசாத் யாதவும், காங்கிரஸ் கட்சியும் இணைந்து பா.ஜ.க. மற்றும் ஜே.டி.யு-க்கு எதிராக தேர்தலில் போட்டியிடுகின்றன. லாலு-ராப்ரி ஆட்சியில் பிஹார் கேங்ஸ்டர் ராஜ்ஜியமாக மாற்றப்பட்டது. இன்று லாலு காங்கிரஸ் கட்சியுடன் கைகோத்திருக்கிறார்.

ஆனால் காங்கிரஸ்தான், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை எதிர்த்தது. அதோடு மண்டல் கொமிஷன் அறிக்கையையும் எதிர்த்தது என்பதை நான் அவரிடம் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஏழைகள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஓ.பி.சி.கள் அனைவரும் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். ஆனால் நிதிஷ் முதல்வர் என்.டி.ஏ. கூட்டணிக்கு வந்து, முதல்வர் ஆனதுக்கு பிறகு பல கொடுமைகள் நிறுத்தப்பட்டன. நிதீஷ் குமார் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு வீட்டிற்கும் மின்சாரம் வழங்கியுள்ளார்.



ஆனால் இண்டியா கூட்டணி மீண்டும் அவர்களை ராந்தல் விளக்கு காலத்துக்கு இழுத்துச் செல்ல விரும்புகிறது. அதோடு ஓ.பி.சிக்களை ஒடுக்க நினைக்கிறது.

மோடி நக்சலிசத்தை ஒழித்தார், பயங்கரவாதத்தை ஒடுக்கினார். ஓ.பி.சி. பிரிவை சேர்ந்த நரேந்திர மோடியை பா.ஜ.க. தான் முதன்முதலாக பிரதமராக்கியது. ஒரு டீ விற்றவரின் மகனை பிரதமராக்கியுள்ளது. 80 லட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கு இலவச ரேஷன் வழங்கியுள்ளோம். 12 கோடிக்கும் அதிகமான கழிவறைகள் கட்டப்பட்டுள்ளன, 10 கோடிக்கும் அதிகமான தாய்மார்களுக்கு உஜ்வாலா திட்டத்தின் கீழ் எரிவாயு இணைப்புகளை வழங்கியுள்ளோம்.” – என்றார்.

# நடிகர் விஜய் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு

நடிகர் விஜய் மீது பொலிஸ் நிலையாத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தியப் பொதுத் தேர்தலின் முதற்கட்ட வாக்குப்பதிவு தமிழ்நாடு மாநிலத்தில் நடைபெற்றது, அங்கு பல முன்னணி நடிகர்கள் பல தொகுதிகளில் வாக்களித்தனர்.

இந்த நிலையில் பிரபல நடிகரும் அரசியல்வாதியுமான தளபதி விஜய் தமிழகத்தின் நீலாங்கரை வாக்குச்சாவடியில் வாக்களித்தார்.

இதன்போது வாக்களிக்களிப்பதற்காக வாக்குச்சாவடிக்கு வருகைத்தந்தபோது, அவரது ஆதரவாளர்கள் அங்கு வருகைத்தந்திருந்ததால், பொது மக்களுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய, இந்த விடயத்தைக் கருத்தில் கொண்டு சமூக ஆர்வலர் ஒருவர் விஜய் மீது பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்துள்ளார் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# நீரில் மூழ்குகின்றது சீனா; ஆய்வில் அதிர்ச்சி தகவல்



சீனாவின் சில முக்கிய நகரங்கள் நீரில் மூழ்கி வருகின்றன என அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

வெள்ளம், மழை, கடல் மட்ட உயர்வு உள்ளிட்ட காரணங்களால் இவ்வாறாக சீனாவின் சில முக்கிய நகரங்கள் நீரில் மூழ்கும் அபாயத்தில் உள்ளன என கூறப்பட்டுள்ளது.

சீனாவில் இந்த நிலை தொடர்ந்தால், பல மில்லியன் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

சீனாவின் முக்கிய நகரங்களில் உள்ள 45 நகர்ப்புற நிலப்பரப்பில் ஆண்டிற்கு 3 மில்லி மீற்றர் வரை நீரில் மூழ்குவதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது.

தற்போது சீனாவில் உள்ள நகரங்களில் 900 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் வாழ்கின்றனர். சிறிய அளவில் நில பற்றாக்குறை ஏற்பட்டாலும் நகர கட்டமைப்பில் கடுமையான நெருக்கடி வரும் என்று ஆய்வை நடத்திய அதிகாரிகள் கூறுகின்றனர்.

இயற்கைப் பேரிடர்களால் சீனா ஆண்டிற்கு 1 பில்லியன் டாலர் இழப்பை எதிர்நோக்குகிறது.

அடுத்த நூற்றாண்டில் சீனாவின் கடலோரப்பகுதியில் உள்ள கால் பங்கு இடங்கள் கடல்மட்ட உயர்வால் பாதிக்கப்படலாம். இதனால் பல நெருக்கடிகளை சீனா சந்திக்கக்கூடும் என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

வடக்குப் பகுதியில் உள்ள டியாஞ்சின் நகரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. டியாஞ்சின் நகரத்தில் 15 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் வாழ்கின்றனர்.

# மத்திய ஆபிரிக்காவில் ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்து; 58 பேர் பலி





மத்திய ஆபிரிக்காவில் ஆற்றில் 300 பேர் சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 58 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மத்திய ஆபிரிக்கா தலைநகரான பாங்குவில் வசிக்கும் மக்கள் மற்ற பகுதிகளுக்கு செல்ல ஆற்றை கடக்கும் முறையே உள்ளது.

இந்த நிலையில் இறுதி சடங்கு நிகழ்ச்சிக்கு செல்ல படகில் சுமார் 300 பேர் ஆற்றை கடக்க முயற்சி செய்துள்ளனர்.

அப்போது திடீரென படகு ஆற்றில் கவிழ்ந்து விபத்தில் சிக்கி 58 பேர் உயிரிழந்துள்ளனர்.

மீதமுள்ள 200 இற்கும் மேற்பட்டோர் தண்ணீரில் சிக்கி உயிருக்கு போராடிய நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்பு படையினர் மீட்பு பணியை மேற்கொண்டனர்.

இதனையடுத்து நிலைமையை உணர்ந்த உள்ளூர் கடற்றொழிலாளர்கள் தங்கள் படகுகள் மூலம் மீட்பு பணியை மேற்கொண்டுள்ளனர்.

விபத்தில் சிக்கியவர்களில் எத்தனை பேர் மீட்கப்பட்டுள்ளனர் என்பது குறித்து எந்த தகவலும் இதுவரை வெளியாகவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் படகு கவிழ்ந்த விபத்தில் 50 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# தோட்டத் தொழிலாளர்களுக்காக நேற்று அக்கரப்பத்தனை நகரிலும் ஆர்ப்பாட்டம்

(தலவாக்கலை நிருபர்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக 1700 ரூபா வழங்கபட வேண்டும் என வலியுறுத்தி அக்கரப்பத்தனை நகரிலும் நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் ஏ.பி. சக்திவேல் ஏற்பாட்டில் நடைப்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் அக்கரப்பத்தனை பிரதேச சபையின் முன்னாள் தலைவர்கள் இராமன் கோபால், கதிர் செல்வன் மற்றும் அக்கரப்பத்தனை, டயகம, மன்றாசி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துக்கொண்டனர். பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1700 ரூபா நாள் சம்பளமாக வழங்குமாறு வலியுறுத்தி அக்கரப்பத்தனை நகர வர்த்தகர்கள் கடைகள் அனைத்தையும் மூடி கறுப்பு கொடிகளை பறக்கவிட்டிருந்தனர்.

கொட்டகலையிலும் இத்தகைய போராட்டம் நேற்று நடைபெற்றிருந்தது.



# கடையடைத்து, கறுப்புக் கொடி பறக்கவிட்டு வீதியில் உருண்டும் இராகலையில் போராட்டம்

(ஆ.ரமேஸ்)

பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1700 ரூபாயாக அதிகரிக்க வலியுறுத்தி நேற்று நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட போராட்டங்களின் போது இராகலை நகரில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், கடையடைத்து, கறுப்பு கொடி பறக்க விட்டு, பேரணி நடத்தியும் வீதியை மறித்தும், வீதியில் அமர்ந்தும், வீதியில் படுத்து உருண்டும் போராட்டம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் போராட்டங்களில் மலையக மக்கள் திரண்டு பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.









# பருத்தித்துறையில் நேற்றைய தினம் விழிப்புணர்வுக்காக சைக்கிள் பேரணி





வடமராட்சி – பருத்தித்துறையில் தொற்றா நோய்ப் பாதிப்புகளில் இருந்து பொதுமக்கள் தம்மை விடுவித்துக் கொள்வது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் சைக்கிள் பேரணி ஒன்று நேற்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை காலை முன்னெடுக்கப்படது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊழியர்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் இடம்பெற உள்ள நிலையில் அதன் ஒரு பகுதியாக விழிப்புணர்வு சைக்கிள் பேரணி இடம்பெற்றது.

நீரிழிவு, இரத்த அழுத்தம் உள்ளிட்ட தொற்றா நோய் பாதிப்புகளினால் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வருபவர்களது எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வரும் நிலையில் அவற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் குறித்த விழிப்புணர்வு சைக்கிள் பேரணி திட்டமிடப்பட்டுள்ளது.

சைக்கிள் ஓட்டுவதன் மூலம் உடலுக்கு அடிப்படையான பயிற்சியினை வழங்குவதன் ஊடாக இந்தத் தொற்றா நோய் பாதிப்புகளை குறைத்துக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் பொதுமக்களிடம் சைக்கிள் ஓட்டம் தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்தவே இந்த சைக்கிள் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை முன்றிலில் இருந்து நேற்றுக் காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகிய குறித்த போரணி யாழ்ப்பாணம் – பருத்தித்துறை வீதி ஊடாக பயணித்து நெல்லியடி சந்தியை சென்றைடந்து அங்கிருந்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதியூடாக சென்று மாலை சந்தி வழியாக மீண்டும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையை வந்தடைந்தது.

சைக்கிள் பேரணியில் ஆர்வமுள்ள பொதுமக்களும் இணைந்து கொண்டனர்.

குறிப்பாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி திருமதி தயாளினி மகேந்திரன் இச்சைக்கிளோட்டத்தில் பங்கேற்றிருந்தமையுடன், தொற்றா நோய் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்தும் தெரிவித்திருந்தார்.





# யாழ். - ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிகள் இணைந்து நேற்று நடைபவனி நிகழ்வு

ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிக்கான நடைபவனி நேற்று இடம்பெற்றது.

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையும் யாழ் போதனா வைத்தியசாலையும் இணைந்து இந்த நடைபவனியை ஏற்பாடு செய்தமையுடன் வடமாகாண பிராந்திய சுகாதார பணிமனை மற்றும் யாழ்ப்பாண பிராந்திய சுகாதார பணிமனை என்பனவும் அதில் பங்கேற்றன.

ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் நோயாளர் விடுதி ஒன்றை கட்டுவதற்கான நன்கொடைகளை கொடையாளிகளிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான விழிப்புணர்வின் நிமித்தமும் மக்களுக்கான சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் நடாத்தப்பட்டது.

இந் நடைபவனி யாழ் போதனா வைத்தியசாலையில் காலை 6 மணியளவில் ஆரம்பித்து பண்ணை வீதி வழியாக ஊர்காவற்றுறை வைத்தியசாலையை அடைந்தது.
















# மட்டு. செபஸ்தியார் ஆலயத்திலும் ஈஸ்டர் தின நினைவேந்தல் நிகழ்வு

**(பழுவூரான்)**

ஈஸ்டர் தாக்குதல் நடைபெற்று ஐந்து வருடங்கள் பூர்த்தியடைந்த நிலையில் மட்டக்களப்பு கிறிஸ்தவ தேவாலயங்களில் நேற்று விசேட வழிபாடுகள், திருப்பலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன,

அந்த வகையில் உயிரிழந்த உறவுகளுக்கு ஆத்ம சாந்தி வேண்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு புனித செபஸ்தியார் தேவாலயத்தில் உயிரிழந்தவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு உணர்வு பூர்வமாக இடம் பெற்றது.

இதன்போது உயிர்நீர்த்தவர்களின் உருவப்படம் தாங்கிய பதாகையின் முன்பாக சுடர் ஏற்றப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் அருட்தந்தை நவரெத்னம் அடிகளார், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் மற்றும் ஆலய பங்குமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.













# ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் சூத்திரதாரிகளை கைது செய்யக் கோரி மட்டக்களப்பில் கவனவீர்ப்பு!






**(கனகராசா சரவணன், பழுவூரான்)**

மட்டக்களப்பில் உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டு தாக்குதலில் தொடர்புபட்ட சூத்திரதாரிகளை கைது செய்ய கோரி பொதுமக்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் மட்டு காந்தி பூங்காவின் முன்னால் நேற்று ஞாயிற்றுக்கிழமை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உயிர்த ஞாயிறு குண்டுதாக்தல் இடம்பெற்று 5 ஆவது வருட நினைவு தினத்தையிட்டு, சூத்திரதாரிகளைக் கைது செய்யக் கோரி சமூக செயற்பாட்டாளர்கள் கவனவீர்ப்பு ஆர்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தனர். காந்தி பூங்காவின் முன்னால் பொது மக்கள், அரசியல்வாதிகள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள், மதகுருமார்கள் நூற்றுக்கு மேற்பட்டோர் ஒன்று திரண்டனர்.

இதன்போது, “அரசே! கொலையாளிகளை மறைக்காதே!”, “குண்டு வெடிப்பின் சூத்திரதாரிகளைக் கைது செய்!”, “சர்வதேசமே மெனத்தைக் கலைத்து ஈஸ்ரர் குண்டுவெடிப்பின் நீதியை தா!”, “வேண்டும், வேண்டும் நீதி வேண்டும்!”, “ஜ.நாவில் வழங்கிய வாக்குமூலம் என்னாச்சு?”, “5 ஆண்டுகள் கடந்தும் அவலத்துக்கு நீதி இல்லையா?“ – போன்ற சுலோகங்கள் ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பியபடி சுமார் ஒருமணித்தியாலம் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

SRI LANKA POST

## தபால் திணைக்களத்திற்கு இணையான போலி இணையத்தளங்கள் நீக்கப்படும்

தபால் திணைக்களத்தின் இணையத்திற்கு இணையாகக் காணப்படும் போலி இணையத்தளங்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறான 5 போலி இணையத்தளங்களை இணையத்திலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்துள்ளார்.

இவ்வாறான இணையத்தளங்களுக்குள் பிரவேசித்து 35 பண மோசடி சம்பவங்கள் பதிவாகியுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.



## மதுச் சாலைகள் நாளைக்கு பூட்டு

பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நாளை 23ஆம் திகதி மதுபானசாலைகள் மூடப்படவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மே மாதம் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரையான காலப்பகுதி வெசாக் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்காரணமாக, வெசாக் பண்டிகையை முன்னிட்டு 22, 23, 24ஆம் திகதிகளில் மதுபானசாலைகள் மூடப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சீனக் குடாவிலும் நேற்று நினைவஞ்சலி

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதலின் ஐந்தாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுளை திருகோணமலை மறைமாவட்டத்தின் சீனக்குடா புனித அந்தோனியார் ஆலயத்தில் பங்கு தந்தை மற்றும் பங்கு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து நேற்றுக் காலை 9:00 மணிக்கு நடத்தினர்.

சீனக்குடா அந்தோனியார் ஆலயத்தின் பங்குத்தந்தை வண பிதா அன்ரன் தேவசீலன் தலைமையின் கீழ் இந்நிகழ்வு நடைபெற்றது.

ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுத்து ஜெபத்தினையும் ஆராதனையும் செய்துவிட்டு, ஆலயத்திலிருந்து வீதிக்கு வருகை தந்து, வீதியில் மெழுகுவர்த்தி ஏற்றி நினைவஞ்சலி செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் அபிரதேசத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கலந்து கொண்டனர்.



# வேலுகுமார் எம்.பியைத் தாக்க முயற்சி: புசல்லாவை நகரில் அமைதியின்மை

நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் மீது தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளதையடுத்து, புசல்லாவை நகர் பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

புசல்லாவை அருள்மிகு ஸ்ரீமஹா கணபதி ஆலயத்தின் அடிக்கல் நாட்டு விழா நேற்று காலை நடைப்பெற்றது.

அந்த நிகழ்வில் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமாரும் கலந்து கொண்டிருந்தார்.

அந்த நிகழ்வின் பின் தனது அடுத்த நிகழ்விற்காக சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமாரை இ.தொ.காவின் உப தலைவர் செல்லமுத்து உட்பட அவரது குழுவொன்று தாக்க முயற்சித்தது.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள பேச்சுவார்த்தை தொடர்பான இ.தொ.காவின் இரட்டை முகத்தை தொடர்ச்சியாக வேலுகுமார் எம்.பி. விமர்சித்து வந்தார்.

உண்மையைச் சொல்வதை தாங்கிக்கொள்ள முடியாமலே இவ்வாறான அநாகரீக செயற்பாட்டில் அவர்கள் ஈடுபடுகின்றனர் என மக்கள் கடும் எதிர்ப்பை அவர்களுக்கு தெரிவித்தனர்.

இந்த நிலையில், வேலுகுமார் எம்.பியை தாக்க முயற்சித்தவர்கள் மக்களின் கடும் எதிர்ப்பினால் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.





# இன்றைய ராசி பலன்கள் - 22.04.2024




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. பலன்கள் தாமதமாகக் கிடைக்கும். அதிகம் எதிர்பார்க்காதீர்கள். பிரார்த்தனையில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வது உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை சிறப்பாக திட்டமிடுங்கள்.

உங்கள் மனதில் காணப்படும் பதட்டத்தை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனை தவிர்த்தல் நலம். உங்களை அமைதியாக வைத்திருங்கள்.

உங்கள் மதிப்பு மிக்க உடைமைகளை பத்திரமாக வையுங்கள். இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. நீங்கள் பணத்தை இழக்க நேரலாம்.




இன்று உங்களுக்கு உற்சாகமான மகிழ்சிகரமான நாள். இன்றைய தினத்தை கொண்டாடி மகிழ்வீர்கள். இது உங்களுக்கு மிகுந்த திருப்தி அளிக்கும். உங்கள் விருப்பங்களை திருப்திகரமாக நிறைவேற்றும் நாள்.

பணியில் அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன. நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள். இன்று கிடைக்கும் புதிய வாய்ப்புகள் உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்களின் கருத்துக்களை உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக பகிர்ந்துகொள்வீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்வீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை இன்று திருப்திகரமாக இருக்கும். இன்று நீங்கள் பணம் சேமிப்பீர்கள்.உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.




உங்களின் சொந்த முயற்சி மூலம் இன்று நீங்கள் அபாரமான வளர்ச்சி காண்பீர்கள்.

பணியிடத்தில் பதவி உயர்வு கிடைக்கலாம். இன்று அர்ப்பணிப்புடன் பணி புரிவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். உங்கள் அணுகுமுறை மூலம் அவரின் இதயத்தில் இடம் பிடிப்பீர்கள்.

நிதி நிலைமையில் முன்னேற்றம் கானப்படும். வங்கியிருப்பை நல்ல முறையில் பராமரிப்பீர்கள். திருப்தி நிலவும்.

சாதரணமான அணுகுமுறை மூலம் ஆற்றல் அதிகரிக்கும். அதன் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




பொறுமையான அணுகுமுறை தேவை. திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உறுதியான அணுகுமுறை தேவை.

பணியிடச் சூழல் அவ்வளவு சிறப்பாக இருக்காது. பணியில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் அனுசரித்து செல்ல வேண்டும்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

கால் வலியால் அவதிப்பட நேரலாம். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது நல்லது.




இன்று உங்களிடம் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இன்று அவ்வளவு சிறப்பான நாளாக அமையாது. உங்கள் வளர்ச்சி குறித்துக் கவலைப் படுவீர்கள். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும்.

இன்று பணியில் உங்களிடம் பொறுமை காணப்படாது. இதனால் தவறுகள் நேரலாம். மனதை நிலைப்படுத்தி பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். நீங்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. நீங்கள் கடன் வாங்க நேரலாம். சிறந்த முறையில் பணத்தை நிர்வகிக்க முயலுங்கள்.




இன்று உங்களின் சொந்த முயற்சி மூலம் வளர்ச்சி காணப்படுகின்றது. வெற்றி நிச்சயம்.

பணியிடத்தில் பதவி உயர்வுக்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்பு பாராட்டைப் பெறும். உங்கள் பணியின் தரத்தை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் உங்கள் அன்பு அதிகரிக்கும்.

நிதிநிலைமை சிறப்பாக காணப்படுகின்றது. இன்று பணத்தை சுதந்திரமாக கையாள்வீர்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று சுறுசுறுப்பான மன நிலையில் காணப்படுவீர்கள். மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். சுய வளர்ச்சிப் பாதையில் செல்வீர்கள். உங்களிடம் மாற்றம் உணர்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இதற்கு உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கையே காரணம்.

உங்கள் துணையுடன் சுமுகமாகப் பழகுவீர்கள். உங்கள் அனுசரனையான அணுகுமுறை அவரை மகிழ்விக்கும். உறவில் பிணைப்பு வலுப்படும்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக காணப்படும். உங்கள் சேமிப்பை அதிகரிப்பீர்கள்.




உங்களால் இன்று மகிழ்ச்சியை தக்க வைத்துக்கொள்ள முடியாது. வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் மனதிற்கு ஆறுதல் கிடைக்கும்.

பணியில் வெற்றி காண மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும். எனவே சுமுகமாக பணிகள் நடைபெற திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் குறைந்த நேரத்தை செலவு செய்வீர்கள். உறவில் மகிழ்ச்சி நிலவ எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று வரவும் செலவும் இனைந்து காணப்படும். உங்கள் பணத்தை இன்று முறையாக பயன்படுத்த இயலாது.

இன்று ஆரோக்கியம் சுமாராக காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.04.2024




இன்று சிறிது சோம்பலுடன் காணப் படுவீர்கள். மனதில் குழப்பம் காணப் படும். இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ள இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நலம்.

இன்று முழுவதும் பணியில் முழுகி யிருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீ காரம் கிடைக்காது.

இன்று உங்கள் இருவரிடையே காணப்படும் மனக் குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படாது. எனவே குழப்பத்தை தவிர்த்து தெளிவான எண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். அஜாக் கிரதை காரணமாக பணத்தை இழக்க நேரலாம்.




இன்று சிறந்த அதிர்ஷ்டம் காணப் படும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்கள் அணுகு முறையில் வளைந்து கொடுக்கும் போக்கு காணப்படும்.

உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் விருந்தில் கலந்து கொள்வீர்கள். அவர்களுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

இன்று உங்கள் துணையிடம் காதல் உணர்வை வெளிபடுத்துவீர்கள். இதனால் உங்கள் பிரியமான வரிடத்தில் அன்பு அதிகரிக்கும்.

இன்று பணவரவிற்கான வாய்ப்பு உள்ளது. பங்கு வர்த்தகத்தின் மூலம் பணம் சம்பாதிப்பீர்கள்.

இன்று அதிக ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று மகிழ்ச்சியான நாள். இன் றைய செயல்களின் விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமையும். கடினமான பணிகளையும் இன்று எளி தாகச் செய்வீர்கள். உங்கள் விருப்பங் கள் நிறைவேறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

மேலதிகாரிகளின் பாராட்டுகள் குவிந்து கொண்டே இருக்கும். பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே தரமாக முடித்துத் தருவீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள்.இது நல்ல புரிந்துணர்வை ஏற்படுத் தும்.

எதிர்பாராத பண வரவுகள் காணப்படும். நீங்கள் ஆச்சரியப்படும் அளவில் உங்கள் வருமானம் அதி கரிக்கும். மகிழ்ச்சி நிலவும்.




இன்றைய நாளை முன்கூட்டியே திட்டமிட்டு அதன்படி நடந்து கொள்ள வேண்டும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும். அத னால் சில பிரச்சினைகள் ஏற்படும். எனவே சிறிது கவனமுடன் இருக்க வேண்டும்.

இன்று சாதகமான பலன்களைப் பெற அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். இன்று சிறப்பான நாளாக அமையாது. இன்று பணிச்சுமை காணப்படும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இன்று பொறுமையாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று பணபுழக்கம் போதுமானதாக இருக்காது. தேவையற்ற செலவினங்கள் அதிகமாக இருக்கும்.






# முழுமையான அதிகாரம் எனக்கு வழங்கப்பட்டால் ஈஸ்டர் கொடூரத்துக்கு நீதியை நிலைநாட்டுவேன்



## சரத் பொன்சேகா தெரிவிப்பு

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்கான முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்டுவேன்."

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை மேற்கொண்டவர்களைப் போன்றே, அன்று ஆட்சியிலிருந்தவர்களும் பொறுப்பு கூற வேண்டும்.

சஹ்ரான் மாத்திரமின்றி அவருடன் தொடர்பினைப் பேணியவர்களும் உள்ளனர். இவ்வாறானவர்கள் அன்று நான் நாட்டில் இருக்கவில்லை என்றும் கூறிக் கொண்டிருக்கின்றனர்.

திட்டமிட்ட பின்னர் எவரும் சம்பவ இடத்தில் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

யுத்த காலத்தில் கூட இவ்வாறான புலனாய்வு தகவல்கள் கிடைக்கவில்லை. தினம், நேரம், இடத்துடன் தகவல்கள் கிடைக்காது.

ஆனால் இவ்வாறான தகவல்கள் கிடைத்தும், பொறுப்பு கூற வேண்டியவர்கள் உறங்கிக் கொண்டிருந்திருக்கின்றனர். தாக்குதல்கள் இடம்பெற்ற இடங்களுக்குக் கூட சிலர் வருகை தரவில்லை.

நாட்டின் தலைவர் பாதுகாப்பு அமைச்சர் அந்த சந்தர்ப்பத்தில் ஒளிந்து கொண்டிருந்தார்.

இவ்வாறான நபர்களுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இழப்பீடு செலுத்துவதால் மாத்திரம் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களுக்கு நியாயம் கிடைத்து விடாது.

அவ்வாறெனில் இறுதி யுத்தத்தின் போது பிரபாகரனுக்கும் இழப்பீட்டு தொகையொன்றைத் தண்டனையாக்ச் விதித்திருக்க முடியுமல்லவா?

500 மில்லியன் இழப்பீட்டுத் தொகையை அறிவித்து பிரபாகரனை விடுதலை செய்துவிடுமாறு அறிவிக்க முடியாதல்லவா? நாட்டில் தற்போதுள்ள சட்டம் போதுமானது. எனவே இதற்கான அதிகாரம் எனக்கு வழங்கப்பட்டால், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை நிலைநாட்டுவேன்."– என்றார்.

VERITÉ RESEARCH
Strategic Analysis for Asia

# வரவு - செலவுத் திட்ட வருமான இலக்கை எட்ட 33 ஆவது ஆண்டாக இம்முறையும் நாடு தவறும்

## வெரிட்டே ரிசேர்ச் தகவல்

2024ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக 33 ஆவது ஆண்டாக இலங்கை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வருமானம் தொடர்பான வரவு – செலவுத் திட்ட இலக்கை எட்டத் தவறிவிடும் என அண்மையில் வெளியிடப்பட்ட '2024 வரவு – செலவுத் திட்ட நிலை தொடர்பான அறிக்கையில்' எதிர்பார்க்கப்படுகிறது.

'வரவு – செலவுத் திட்ட நிலை தொடர்பான அறிக்கை'ஆண்டுதோறும் வெரிட்டே ரிசேர்ச் நிறுவனத்தால் தொகுக்கப்பட்டு, பொருளாதாரத் தகவல்களுக்கான இலங்கையின் முதன்மை தளமாக உள்ள Public Finance.lk இல் வெளியிடப்படுகிறது.

இலங்கையின் வருடாந்த வரவு – செலவுத் திட்டத்தின் நிதி, பணம் மற்றும் பொருளாதார மதிப்பீடுகளின் வலுவான பகுப்பாய்வு மற்றும் புறநிலை மதிப்பீட்டை இந்த அறிக்கை வழங்குகிறது.

அரசாங்க நிதி பற்றிய நாடாளுமன்றக் குழுவால் (COPF) வெளியிடப்படும் வரவு – செலவுத் திட்ட அறிக்கையின் நோக்கத்தையே இந்த அறிக்கையும் பிரதிபலிக்கிறது. இந்த இரண்டு அறிக்கைகளும் வரவு – செலவுத்திட்டம் பற்றிய புரிதலையும் விவாதத்தையும் பொதுமக்கள் மத்தியிலும் நாடாளுமன்றத்திலும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

வெரிட்டே ரிசேர்ச்சின் 'வரவு – செலவுத் திட்ட நிலை தொடர்பான அறிக்கை' நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படும் அரசாங்கத்தின் கணிப்புகளை விடவும் வரவு – செலவுத் திட்டவிளைவுகள் தொடர்பாக மிகவும் துல்லியமான கணிப்புக்களை தொடர்ச்சியாக வழங்கியுள்ளது.

இது இலங்கையில் தொழில்சார் பொருளாதாரப் பகுப்பாய்வு மற்றும் தீர்மானங்களை மேற்கொள்வதற்கான ஒரு முக்கியமான மேலதிக உள்ளீட்டை உருவாக்குகிறது.